ந.க.எண். 15238/2007/ஊ2

பேரூராட்சிகள் இயக்கம்
குறளகம், சென்னை 108.

நாள். 17.8.2007

**சுற்றறிக்கை**

பொருள்– தணிக்கை – உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை – நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகள் – 2007, 2008, 2009 ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ள செயல் அலுவலர்கள் பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்தல் – தொடர்பாக.

பார்வை– இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–108 ந.க.எண். 4617/இஅஅ/ 2007நாள் 1.8.2007.

பார்வையில் காணும் இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற கடிதத்திற்கிணங்க 2007, 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ள செயல் அலுவலர்களைப் பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யும் பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள மூன்று ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ள செயல் அலுவலர்கள் பணியாற்றிய காலம் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியலை சம்மந்தப்பட்ட மண்டல துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அலுவலகங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் அதன் விவரத்தினை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அலுவலகத்திற்கும் மற்றும் இவ்வியக்கத்திற்கும் உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தணிக்கைத் தடைகள் அதிக அளவில் நிலுவையாக இருப்பதால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநர் மற்றும் மண்டல துணை இயக்குநரிடம் தொடர்பு கொண்டு கூட்டமர்வுகள் நடத்தவும் மற்றும் உயர்மட்டக் குழுக் கூட்டம் நடத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் தணிக்கைத் தடைகள் நிலுவை கணிசமாக குறைக்கப்பட வேண்டும்.

இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் உடன் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மண்டல உதவி இயக்குநர்கள்

நகல்–

இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
குறளகம், சென்னை– 108.